**வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ கம்பனி - 2025**

-----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷா கம்பனியின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளிற்கு உரித்தான தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகளை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின், 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனிச் சட்டம் | | | |
| | (i) 131 (1) ஆம் பிரிவு | ஒவ்வொரு கம்பனியும் குறைந்தது ஆண்டிற்கு ஒரு முறையேனும் வருடாந்த அறிக்கையை (Annual Return) கம்பனிகள் பதிவாளருக்கு வழங்க வேண்டும் என்ற போதிலும், 2020 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வருடாந்த அறிக்கைகள் (Annual Return) கம்பனிகள் பதிவாளருக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு வரை வருடாந்த அறிக்கைகள் கம்பனிகள் பதிவாளருக்கு முன்வைக்கப்பட்டதாகவும் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான ஏனைய வருடாந்த அறிக்கைகளை இவ்வருடம் முடிவடைவதற்கு முன்னர் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை கம்பனி சட்டத்தின் 131(1) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் கம்பனிகள் பதிவாளருக்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| | (ii) 223 (2) (அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவுகள் | கம்பனிச் செயலாளர் அல்லது பணிப்பாளர்கள் தொடர்பில் மாற்றம் ஏற்படும் போது அம்மாற்றத்தினையும் கம்பனிச் செயலாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ள விபரங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் போது அம்மாற்றத்தினையும், குறிக்கப்பட்ட படிவத்திற்கு அமைவாகப் பதிவு செய்வதற்காகப் பதிவாளருக்கு அனுப்புவதை உறுதி செய்ய வேண்டும் என்ற போதிலும் 2019 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனிகள் சட்டத்தின் 223 (2) (அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவுகளின் கீழ் பணிப்பாளர்களின் மாற்றங்கள் குறிக்கப்பட்ட படிவங்களின் பிரகாரம் முன்வைக்கப்பட்டு நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை கம்பனிகள் சட்டத்தின் 223(2)(அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவுகளின் படி கம்பனிகள் செயலாளர் மற்றும் பணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட மாற்றங்கள் கம்பனிகள் பதிவாளருக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய | சட்டத்தின் 38 (1) ஆம் பிரிவின் (இ) பந்தியின் பிரகாரம் நிதிப் கட்டுப்பாட்டிற்காக | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை மீளாய்வு | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(2) ஆம் உபபிரிவின் படி உள்ளகக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வுச் சட்டம் 38 (2) ஆம் உபபிரிவு | தயாரிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் குறித்து மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்க வேண்டும் என்ற போதிலும் கம்பனி அதற்கமையச் செயற்பட்டிருக்கவில்லை. | செய்வதற்காகத் தேவையான அவதான மதிப்பீட்டு அளவுகோல்கள் எதிர்வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு முன்வைக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் குறித்த எழுத்துமூல மீளாய்வொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஸ்தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு, 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய அங்கம் 9/2009 இன் 02 (iv) ஆம் பிரிவு மற்றும் 2013 ஒக்டோபர் 07 ஆம் திகதிய 21∴.2013 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் . | விரல் அடையாள அச்சுப் பிரதிகளைப் பரிசீலித்த போது சுற்றறிக்கைத் தேவையான 08 மணித்தியாலக் காலப்பகுதியில் சேவையாற்றாத உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,311,713 விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஒரு பணிக்காக ஒரு கொடுப்பனவு/சலுகை மாத்திரமே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இக்கொடுப்பனவிற்கு மேலதிகமாக ஞாயிற்றுக்கிழமையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 358,872 விடுமுறை நாள் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஒரு நாட்காட்டி மாதத்திற்கு 02 நாட்களுக்கு மேலதிகமான நாட்களைச் சேவையில் ஈடுபடுத்துவது அவசியமாயின் அது | கம்பனி ஒரு அரச தொழில்முயற்சி என்பதால் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபனக் கோவை என்பன பொருந்தாது எனவும், கம்பனியால் தயாரிக்கப்பட்ட நிர்வாக விதிக் கோவை அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கடமையாற்றிய மணித்தியாலங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக உள்ளகச் சுற்றறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் பரிந்துரைகளின் பேரில் உரிய அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும், ஈடுசெய்யும் விடுமுறைக் கொடுப்பனவு தொடர்புடைய சேவைப் பிரிவுகளுக்கு ஒரே நடைமுறையின் கீழ் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 24 மணித்தியாலமும் செயற்படும் உற்பத்தி நடவடிக்கைகள் காரணமாக சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் | தாபன விதிக் கோவை மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி சேவைக்காலம், கொடுப்பனவுச் செலுத்தல்கள் மற்றும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன முறையான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ’ |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பான அமைச்சின் செயலாளரின் முன்அனுமதியைத் தனிப்பட்ட முறையில் பெறப்பட வேண்டும் என்ற போதிலும் அதற்கமையச் செயற்பட்டிருக்கவில்லை. | சேவையை மாதத்திற்கு 02 நாட்களுக்குக் கட்டுப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் அது குறித்து பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி உரிய அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பி ரமாணம் 880 | அரசாங்கத்தின் காசு, பொருட்கள் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது பொறுப்பில் வைத்திருத்தல், அல்லது பொருட்களை விநியோகித்தல் தொடர்பில் நிர்வாக ரீதியாகப் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களும், அரசாங்கக் கணக்கிற்குரிய சான்றுக் சீட்டுகள், உறுதிப்படுத்தும் காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் தமது கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவார்கள் என்பதற்கு 612 ஆம் அதிகாரமான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை ஆணைச்சட்டத்திற்கு அமைவாகப் பிணை வைக்கப்பட வேண்டும் என்ற போதிலும், பிணைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கும் பணிப்பாளர் சபையிற்கும் அனுப்பி வைக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 'நிதிப்பிரமாணம் 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை ஆணைச்சட்டத்திற்கு அமைவாகச் செயற்பட வேண்டும். ' |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 79,375,055 இலாபமாக இருந்த அதேவேளை அதற்கு இணையான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 537,065,431 ஆக இருந்தது. அதற்கமைய நிதிப் பெறுபேற்றில் ரூபா 457,690,376 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு உற்பத்தி குறைவடைந்தமையால் விற்பனை வருமானம் குறைந்தமை முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உற்பத்தித் திறனை சரியாக மதிப்பிடுதல், விரயத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உற்பத்திச் செலவைச் சரியாகக் கணக்கிடுதல் என்பவற்றிற்காக உற்பத்திச் செயன்முறையின் சாதாரண விரயம் மற்றும் வெளியீட்டு விகிதத்திற்கான சீர்தரங்களை (Norms) நிறுவுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதனால் மீளாய்வாண்டில் உற்பத்திச் செயன்முறையில் காணப்பட்ட விரயத்தை சாதாரண விரயமா அல்லது அசாதாரண விரயமா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது | இதற்காக ஒருவர் ITI நிறுவனத்திலிருந்தும், மற்றொருவர் NERD நிறுவனத்திலிருந்தும், ஏனைய மூவர் திரிபோஷ நிறுவனத்திலிருந்துமாக ஐந்து பேரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உற்பத்திச் செயன்முறைகளில் விரயமாவதுடன் தொடர்புடைய சீர்தரங்களை (Norms) நிறுவி அதற்கமைய கட்டுப்பாடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் திரிபோஷ விநியோகச் செயன்முறையைப் பரிசீலித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) இலங்கையிலுள்ள போஷாக்கு தேவையான அனைத்துக் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காகத் திரிபோஷ உற்பத்தி செய்து இலவசமாக விநியோகிப்பது திரிபோஷ கம்பனியின் பிரதான பணி என்பதால் இலக்கிடப்பட்ட | திரிபோஷ மாஸ்டர் பொதி தேவைப்பாடு 699,313 பொதிகள் அல்ல, 527,690 பொதி எனவும் 06 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையிலான பிள்ளைகளுக்காக ”C” பொதிக்கு பதிலாக புதிய | திரிபோஷ தேவைப்பாடுகளைச் சரியாக மதிப்பிட்டு இலக்கு வைக்கிடப்பட்ட பயனாளிகளுக்குப் போதுமான தொகை இருப்புகளை முறையாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயனாளிகளுக்குத் திரிபோஷ விநியோகிப்பது பற்றிய பரிசீலனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்கள் (RDHS) உள்ளடங்கலாக மருத்துவமனைகள் மற்றும் 39 கம்பனிகளுக்காக மீளாய்வாண்டின் திரிபோஷ மாஸ்டர் பொதிகளின் தேவைப்பாடு 699,313 ஆக இருந்த போதிலும் உண்மையாக விநியோகிக்கப்பட்ட மாஸ்டர் பொதிகளின் அளவு 180,938 ஆக இருந்தமையால் அது தேவைப்பாட்டில் 25.87 சதவீதம் மட்டுமேயாகும். எவ்வாறாயினும் கம்பனியால் மீளாய்வாண்டின் திரிபோஷ தேவைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் விநியோக முன்னேற்றம் 34.29 சதவீதம் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரிசி கலந்த திரிபோஷ உற்பத்தி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் உற்பத்தித் திறன் வரம்பிற்குட்பட்டதாக இருந்தமையால் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் சில மாவட்டங்களுக்கு மட்டுமே விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் 180,938 திரிபோஷ மாஸ்டர் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அது முழுத் தேவைப்பாட்டில் 34.29 சதவீதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | கம்பனி வருடாந்த திரிபோஷ தேவைப்பாட்டை மதிப்பிட்டு மாதாந்தம் அவற்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற போதிலும் மாதாந்தம் விநியோகிக்கப்பட்ட திரிபோஷ அளவு தேவைப்பாட்டில் 0 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் திரிபோஷ உற்பத்தி செய்து விநியோகிப்பது முறையான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்படாமையே இதற்குக் காரணமாக அமைந்திருந்தது. | ஆண்டு முழுவதும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் (சோளம் மற்றும் சோயா) எல்லைப்படுத்தும் காரணியாக இருந்ததாகவும் உள்நாட்டு மூலப்பொருட்கள் தரமான நிலையில் இருக்கவில்லை என்றும் கம்பனியால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களால் கொள்வனவுச் சிக்கல்கள் எழுந்தமையால் உற்பத்தி நடவடிக்கைகள் சீராக நடைபெறவில்லை என்றும் விநியோக நடவடிக்கைகளையும் சீராக மேற்கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த தேவைப்பாட்டைச் சரியாக மதிப்பிட்டு திட்டமிட்டவாறு திரிபோஷ உற்பத்தி மற்றும் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (இ) | கம்பனியின் அமைப்பாட்சிக் விதிகளின் படி பணிப்பாளர் சபைக் கட்டமைப்பு 07 பேரைக் கொண்டதாக அமைவதுடன் அது தொடர்புடைய துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் சுகாதார அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தும் முகவராக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நடைபெற்ற 13 பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் ஒரு கூட்டத்திற்கு மட்டுமே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இணையவழி மூலம் கலந்துகொண்டிருந்தார். | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒவ்வொரு பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கும் அழைப்பு விடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கம்பனிப் பணிகளைப் பயனுள்ள முறையில் மேற்பார்வை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்கள், பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் உற்பத்திச் செயன்முறை குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசீலனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி 21,872.7 மெட்ரிக் தொன்னாகவும் (Blend 24,375) உண்மையான திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி 5,233.095 மெட்ரிக் தொன்னாகவும் (Blend 5814.5) இருந்தமையால் உண்மையான உற்பத்தி, திட்டமிடப்பட்ட உற்பத்தியில் 23.9 சதவீதம் எனும் மிகக் குறைந்த பெறுமதியாக இருந்தது. மொத்த உற்பத்தியில் திரிபோஷ உற்பத்தி 3,957.7 மெட்ரிக் தொன்னாகவும் (75.6%) சுபோஷ 1,275.3 மெட்ரிக் தொன்னாகவும் (24.4%) இருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் ஒட்டுமொத்தத் திரிபோஷ தேவைப்பாட்டில் விநியோகம் 25.87 சதவீதம் மட்டுமேயாகும். எனவே கம்பனியின் அமைப்பாட்சி | இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள் கொள்வனவுச் செயன்முறைகளில் காணப்பட்ட இடர்பாடுகள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்களின் தரக் குறைபாடுகள் காரணமாக உற்பத்திக்காகத் தேவையான சோளம் மற்றும் சோயாவை சரியான தரத்திலும் அளவிலும் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்ததாகவும் அதன் காரணமாக உற்பத்தி இலக்குகளை அடைய முடியாமல் போயிருந்ததாகவும் திரிபோஷ உற்பத்தியை அதிக அளவிலும் மேலதிகமாக சுபோஷ உற்பத்தியையும் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சிலிருந்து கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம், நடைமுறை மூலதனத் | தேசிய ஊட்டச்சத்துத் தேவைப்பாட்டிற்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் திரிபோஷ உற்பத்தியைத் திறம்பட விநியோகிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விதிகளுக்கு அமைவாக இலங்கையின் தாய்மார்களினதும் குழந்தைகளினதும் ஊட்டச்சத்தின்மையைக் குறைப்பதற்காக இலங்கையில் வலுவூட்டப்படும் மேலதிக உணவு உற்பத்திகளுக்கான வசதிகளைச் செய்து வருடாந்தத் திரிபோஷ தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு கம்பனி தவறியிருந்தது. | தேவைகள் காரணமாகச் செயற்பாடு களைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்காக சுபோஷ உற்பத்தி மற்றும் விற்பனையையும் செய்ய வேண்டி ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | மீளாய்வாண்டில் மாதாந்த உண்மையான திரிபோஷ உற்பத்தி 1.1 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையிலான சதவீதங்களில் உற்பத்தி செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், உண்மையான சுபோஷ உற்பத்தி 25.3 சதவீதம் முதல் 155.7 சதவீதம் வரையிலான சதவீதத்தில் உற்பத்தி செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. திரிபோஷ உற்பத்தியின் மாதாந்த இலக்குகளை அடையாமல் சுபோஷ உற்பத்தியின் மாதாந்த இலக்குகளை மிஞ்சி உற்பத்தி செய்தமையின் மூலம் கம்பனியின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறவில்லை. | 2025 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் சுபோஷ உற்பத்தி அதிகரித்தது அரசாங்கத்தின் விசேட நிவாரணப் பொதிக்காக சீ∴ச லங்கா சத்தோச நிறுவனம் ஊடாகக் கிடைத்த கட்டளைகள் காரணமாக என்றும் மூலப்பொருட்கள் எல்லைப்படுத்தப்பட்ட போதிலும், ஆண்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் திரிபோஷ 76 சதவீதமும் சுபோஷ 24 சதவீதமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ’ | உற்பத்தித் தேவைகள் மற்றும் தேசிய ஊட்டச்சத்துத் திட்டங்களின் முன்னுரிமைகளுக்கு அமைவாக உற்பத்தியை முகாமையீடு செய்ய வேண்டும். ’ |
| (iii) | மீளாய்வாண்டில் கம்பனியால் முன்வைக்கப்பட்ட உற்பத்திச் செயலாற்றுகையின் படி, உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட நாட்களின் எண்ணிக்கை 118 ஆகவும் உற்பத்தி மேற்கொள்ளப்படாத நாட்களின் எண்ணிக்கை 164 ஆகவும் இருந்தது. அதற்கு உற்பத்தியின் முக்கிய மூலப்பொருட்களான சோயா மற்றும் சோளத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்ய முடியாமல் போயிருந்தமை காரணமாக அமைந்திருந்தது. அதற்கமைய ஆண்டின் பாதியளவிற்கும் அதிகமான காலப்பகுதியில் | கம்பனியால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களால் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள் கொள்வனவுச் செயன்முறைகளில் காணப்பட்ட இடர்கள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்கள் சரியான தரத்தினைக் கொண்டிருக்காமையால் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைய முடியாது போயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உற்பத்தியைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கு மூலப்பொருட்களை விரைவாகவும் போதுமான அளவிலும் பெற்றுக்கொள்வதற்கு முறையான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தியில் ஈடுபட்டிருக்கவில்லை. | | |
| (iv) | மீளாய்வாண்டில் உற்பத்திப் பிரிவினால் Blend ஆக உற்பத்தி செய்யப்பட்ட திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி 5,233 மெட்ரிக் தொன்னாக இருந்த அதேவேளை கணக்குப் பிரிவினால் முன்வைக்கப்பட்ட தகவல்களின் படி, திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி 5,009.6 மெட்ரிக் தொன்னாக இருந்தது. அதற்கமைய திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தியில் 223.4 மெட்ரிக் தொன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டின் கணக்காயாளர் தலைமை அதிபதியின் வரைவு அறிக்கைக்கு கம்பனியின் தலைவரால் முன்வைக்கப்பட்ட பதிலின் படி Blend ஆக உற்பத்தி செய்யப்பட்ட அளவிற்கும் இறுதி உற்பத்தியில் காணப்படக்கூடிய திரிபோஷ மற்றும் சுபோஷ அளவிற்கும் இடையிலான வேறுபாட்டிற்கான காரணங்களாக ஒவ்வொரு பொதியிலும் 10 கிராம் முதல் 15 கிராம் மேலதிகமான அளவு சேர்க்கப்பட்டுள்ளமை, தூளாக அகற்றி விரையமாதல் மற்றும் Dry CSB (நொதித்த உலர் சோளம் மற்றும் சோயா கலவை) விரையத்தில் ¼ பங்கு விரையமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயங்களைக் கவனத்திற்கொண்டு செய்யப்பட்ட கணக்கீடுகளுக்கு அமைவாக மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த உற்பத்தியில் விரையம் 101 மெட்ரிக் தொன்னாக இருக்க வேண்டிய போதிலும், உற்பத்தி வேறுபாடு மேலும் 122 மெட்ரிக் தொன் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | ISO 22000 தரச் சான்றிதழுக்காக மேற்கொள்ளப்பட்ட அளவுத்திருத்தத்தின் போது கலவை இயந்திரத்தின் நிறை காட்டும் முறைமையில் 900 கி.கி. எனக் காண்பிக்கப்பட்ட போதிலும் உண்மையான நிறை 870 கி.கி. எனக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு ஒரு கலவையிலிருந்து 20–30 கி.கி. வரை குறைந்திருந்தமை கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட 225 மெ.தொ. உற்பத்தி வேறுபாட்டிற்கும் காரணமாக அமைந்தது என்றும் இயந்திரத்தில் நிறைகாட்டும் புதிய கட்டுப்பாட்டு முறைமையொன்று பொருத்தப்பட்டு ஆண்டிற்கு இருமுறை அளவுத்திருத்தம் செய்யத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உற்பத்தித் தரவுகளின் துல்லியத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காகப் போதுமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். ’ |
| (v) | திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்திச் செயன்முறையின் இறுதிப் கட்டத்தில் கலக்கப்படும் ஏற்றதரத்திலான தாதுப் பொருட்களைக் மற்றும் | கலவைச் செயன்முறையின் போது பால்மா, வைட்டமின் மற்றும் தாதுப் பொருட்களைக் கையினால் அளந்து சேர்ப்பதால் தவறுகள் ஏற்படக்கூடும் என்றும் | உற்பத்திக்கான மூலப்பொருட்களைச் சேர்க்கும் கலவைக்கு அமைவாக மூலப்பொருட்களைப் |

| | | | |
|---|---|---|---|
| | பால்மாவின் அளவுகள் முறையே 0.9 சதவீதம் மற்றும் 3 சதவீதம் ஆகும். உற்பத்திப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி, மொத்த உற்பத்தியான 5,233,095 கிலோகிராமிற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பால்மாவினதும் தாதுப் பொருட்களினதும் அளவு முறையே 156,992.85 கிலோகிராமாகவும் 47,097.85 கிலோகிராம் ஆகவும் இருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்ட பால்மாவினதும் தாதுப் பொருட்களினதும் அளவு முறையே 157,075 கிலோகிராமாகவும் 46,293.25 கிலோகிராமாகவும் இருந்தது. அதற்கமைய, ஒட்டுமொத்த உற்பத்தியைக் கருத்திற் கொள்ளும் போது பால்மா 82 கிலோகிராம் அதிகமாகவும் தாது உப்புக்கள் 804.6 கிலோகிராம் குறைவாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால் குறிக்கப்பட்ட தரத்தில் திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி செய்யப்படாமையால் இலங்கையில் ஊட்டச்சத்தின்மையை ஒழித்து ஆரோக்கியமான தேசத்தை கட்டியெழுப்பும் நோக்கில் திரிபோஷ உற்பத்தி செய்து இலவசமாக விநியோகிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அக்குறைபாட்டைக் குறைப்பதற்காக Dosing Unit ஒன்றைப்பொருத்தி இயந்திரத்தின் உதவியுடன் சரியாகக் கலக்கும் முறையொன்றை அறிமுகப்படுத்த பரிதுரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்த வேண்டும். |
| (vi) | கம்பனியின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உள்ள Anderson I மற்றும் Anderson II ஆகிய 02 இயந்திரங்களின் உற்பத்தித் திறன் முறையே 1,800 Kg/hr (Blends 2) மற்றும் 3,600 Kg/hr (Blends 4) ஆக மொத்த இயந்திரத் திறன் ஒரு மணித்தியாலத்திற்கு 5,400 கிலோகிராம் ஆக இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் Anderson I இயந்திரம் 89 நாட்களும் Anderson II இயந்திரம் 298 நாட்களும் பயன்படுத்தப்பட்டு Blend 24,375 உற்பத்தி செய்யத் | போதுமான மூலப்பொருட்களும் ஊழியர்களும் இன்மை இதற்குப் பிரதான காரணமாக அமைந்ததாகவும் இவ் வருடத்தில் Anderson 1 இயந்திரத்தைப் பயன்படுத்தி அரிசித் திரிபோஷ உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்காகத் தேவையான இயந்திர உபகரணங்கள் தருவிக்கப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ’ | உற்பத்தி இலக்குகளை அடைவதற்கு உள்ள இயந்திரத் திறனை உகந்த முறையில் பயன்படுத்த வேண்டும். |

திட்டமிடப்பட்டிருந்த போதிலும் Anderson I இயந்திரம் ஆண்டு முழுதும் பயன்படுத்தப்படாமல் இருந்ததாகவும் Anderson II இயந்திரம் 2,025 Kg/hr (Blends 2.25) எனும் குறைந்த சராசரிப் பெறுமதியில் 119 நாட்கள் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டது.

(vii) கம்பனியின் உற்பத்திச் செயன்முறையில் தொடர்ச்சியாகச் சில நாட்கள் உற்பத்தியின் பின்னர் இயந்திரப் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்புப் பணிகளைச் செய்து அதிலிருந்து சேகரிக்கப்படும் பொருட்கள் விரையமாக அகற்றப்பட்ட பின்னர் மீண்டும் உற்பத்தி ஆரம்பிக்கப்படும். மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டத்தின் படி 5 நாட்கள் முதல் 24 நாட்கள் வரை 26 உற்பத்தித் தடவைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உண்மையான உற்பத்திச் செயன்முறையில் 23 உற்பத்தித் தடவைகள் 02 நாட்கள் முதல் 13 நாட்கள் வரையிலான குறைந்த காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக முன்னைய ஆண்டின் Dry CSB மற்றும் தூள் விரையத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் Dry CSB மற்றும் தூள் வீணாதல் 10.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

மூலப்பொருட்கள் தொடர்ச்சியாகக் கிடைக்காமை மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்கும் நிலைக்கு ஏற்ப உற்பத்தியை மேற்கொண்டமை காரணமாக உற்பத்தி மற்றும் சுத்திகரிப்புப் பணிகளது தடவைகளின் எண்ணிக்கை அதிகரித்ததாகவும் திட்டமிட்டவாறு உற்பத்தி நடைபெற்றிருந்தால் விரையத்தைக் குறைத்துக்கொண்டிருக்க முடியும் என்றும் மேலதிக விரையத்தைக் குறைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீணாவதைக் குறைக்கும் வகையில் உற்பத்தி மற்றும் பராமரிப்பு கால அட்டவணைகளை முறையான வகையில் திட்டமிட வேண்டும்.